ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2474/02 - 2026 පෙබරවාරි මස 02 වැනි සඳුදා - 2026.02.02

*2474/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.-பி 4/1981(II)(அ)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டம்**

24இ மற்றும் 24ஈ என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டத்தின் ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடையதாகக்கூடிய சொல்லப்பட்ட சட்டத்தின் V ஆம் பாகத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24இ மற்றும் 24ஈ என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சுற்றாடல் அமைச்சர் ஹெட்டிதந்திரி பட்டபெந்திக தம்மிக ஆகிய நான், இக்கட்டளையினால் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் ;-

(அ) எந்தக் காணி இடப்பரப்பின் மற்றும் வரைபடத்தின் எல்லை அடையாளங்களும் எல்லைகளும் அட்டவணை 1 இல் தரப்படுகின்றனவோ அந்தக் காணி இடப்பரப்பு மற்றும் வரைபடத்தின் சூழல் பாதுகாப்பு இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் (இக்கட்டளையில் "பாதுகாப்பு இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கோனமெரியாவை சூழல் பாதுகாப்பு இடப்பரப்பு" என அழைக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அட்டவணை II இல் பட்டியலிடப்பட்ட கருமங்கள் தவிர்ந்த ஏதேனும் திட்டமிடற் கருத்திட்டம் மற்றும் கருத்திட்டம் இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து பாதுகாப்பு இடப்பரப்பினுள் நடைமுறையில் இல்லாதொழிதல் வேண்டும்.

**ஹெட்டிதந்திரி பட்டபெந்திகே தம்மிக,**
சுற்றாடல் அமைச்சர்.

கொழும்பு,
2026, பெப்புருவரி 02.

1A - PG 7508 — 753 (2026/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை 1

1. பாதுகாப்பு இடப்பரப்பின் விஸ்தீரணம் 1.775 ஹெக்டேயர்களாகும்.

2. பாதுகாப்பு இடப்பரப்பு, வட மத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் கெப்பித்திகொல்லாவை பிரதேச செயலாளர் பிரிவில் கோனமெரியாவை கிராம அலுவலர் பிரிவில் வேரகம ரஜமகா விஹாரை காணியில் அமைந்துள்ளது.

3. பாதுகாப்பு இடப்பரப்பின் எல்லை அடையாளங்களும் எல்லைகளும் பின்வருமாறு:

வடக்கு - நடைபாதை

கிழக்கு - நடைபாதை வழியாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் ஆயத்தொலை 460179கி, 953890வ, 460213கி, 953829வ, 460242கி, 953795வ ஊடாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் (ஜிபிஎஸ்) குறிப்பிடப்பட்ட ஆயத்தொலைகள் 460254கி, 953764வ என்ற இடம் வரை

தெற்கு - கடைசியாக குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து மதவாச்சி கெப்பதிகொல்லாவை வீதியின் வடக்கு எல்லை வழியாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் (ஜிபிஎஸ்) ஆயத்தொலை 460054கி, 953777வ என்ற இடம் வரை

மேற்கு - கடைசியாக குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து வேரகம ரஜமகா விஹாரையின் எல்லை வழியாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமை (ஜிபிஎஸ்) ஆயத்தொலை 460096கி, 953874வ, உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமை வழியாக ஆயத்தொலை 460076கி, 953830வ என்ற இடம் வரை

4. பாதுகாப்பு இடப்பரப்பின் நிலப்படம்



## அட்டவணை 1

1. இக்கட்டளையின் நோக்கத்துக்காக பட்டியலிடப்பட்ட கருமங்கள் பின்வரும் செயற்பாடுகளுக்காக இருத்தல் வேண்டும் -

(அ) ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு ;

(ஆ) சொல்லப்பட்ட பாதுகாப்பு இடப்பரப்பின் உயிர்பல்வகைமை பாதிக்காத சூழல் நட்புசார் முறையொன்றில் புறநாட்டுக்குரிய தாவரங்களையும் வேற்று ஆக்கிரமிப்பு தன்மைகொண்ட இனங்களையும் நீக்கல் ;

(இ) குடிக்கின்ற நோக்கங்களுக்காக நீரைப் பெறல் ;

(ஈ) பாதுகாப்பு இடப்பரப்பிற்கு ஏதேனும் ஊறு இன்றிய, பாதிப்பின்றிய அல்லது மாசு இன்றிய ஏதேனும் கல்விசார் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடு ;

(உ) தொல்பொருள் தளங்களின் அகழ்வாராய்ச்சி, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.

2. ஓராம் விடயத்தில் பட்டியலிடப்பட்ட கருமங்கள் பின்வரும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும் -

(அ) பாதுகாப்பு இடப்பரப்பின் இயற்கையான நிலைபெறுதன்மைக்கு முட்டுக்கட்டையிடுதலாகாது.

(ஆ) தாவரங்களுக்கும் விலங்கினங்களுக்கும் மற்றும் அவற்றின் வாழிடங்களுக்கும் இடையூறு ஏற்படுத்தலாகாது ;

(இ) பாதுகாப்பு இடப்பரப்பினுள் ஏற்கனவே உள்ள நீரூற்றுகளுக்கும் நீர்வழிகளுக்கும் இடையூறு ஏற்படுத்தலாகாது.

3. ஓராம் விடயத்தில் பட்டியலிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்கான அங்கீகாரமானது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

4. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது அதன் நோக்கெல்லையின் கீழான எல்லா கருமங்களையும் தொடர்ச்சியாக கண்காணித்தல் வேண்டும்.

5. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது பதிவுகளை பேணுதல் வேண்டுமென்பதுடன் அதன் கடமைகளை புரியும் போது பேணப்பட வேண்டிய முறையான பதிவுகளை செய்வித்தலும் வேண்டும்.

6. ஓராம் விடயத்தின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய கல்விசார் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளின் கற்கை அல்லது ஆராய்ச்சி அறிக்கையானது பாதுகாப்பு இடப்பரப்பினை பார்வையிட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இதன்கண் குறிப்பிடப்படும் கருமங்களுக்கு இணங்கியொழுகாதவிடத்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது, அத்தகைய இணங்கியொழுகாமையை கல்விசார் மற்றும் ஆராய்ச்சி செயற்பாட்டை மேற்கொண்ட ஆளுக்கும், அத்தகைய ஆள் எந்நிறுவனத்தை அல்லது எப்பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அவ்வியைபான நிறுவனத்துக்கும் அல்லது பல்கலைக்கழகத்துக்கும் தெரிவித்தல் வேண்டும். என்பதுடன் காலந்தாழ்த்தாமல் அத்தகைய அறிக்கையின் கோப்பிப்பை வேண்டுதலும் வேண்டும்.

EOG 02 - 0012

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.